## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 1-10 - பொருமாநீள்படை
### (ஈச்வரன் நிர்ஹேதுகமாகத் தன்னை உபகரிப்பவன் என அருளிச் செய்தல்)

2774 * பொருமா நீள்படை * ஆழி சங்கத்தொடு *
திருமா நீள்கழல் * ஏழுலகும் தொழ **
ஒருமாணிக் குறளாகி நிமிர்ந்த * அக்
கருமாணிக்கம் * என் கண்ணுளதாகுமே 1

2775 கண்ணுள்ளே நிற்கும் * காதன்மையால் தொழில் *
எண்ணிலும் வரும் * என் இனி வேண்டுவம்? **
மண்ணும் நீரும் * எரியும் நல்வாயுவும் *
விண்ணுமாய் விரியும் * எம்பிரானையே 2

2776 எம்பிரானை * எந்தை தந்தை தந்தைக்கும்
தம் பிரானை * தண்தாமரைக் கண்ணனை **
கொம்பராவு * நுண்ணேரிடை மார்வனை *
எம்பிரானைத் தொழாய் * மடநெஞ்சமே! 3

2777 நெஞ்சமே நல்லை நல்லை * உன்னைப் பெற்றால்
என் செய்யோம்? * இனி என்ன குறைவினம்? **
மைந்தனை * மலராள் மணவாளனை *
துஞ்சும் போதும் * விடாது தொடர் கண்டாய் 4

2778 கண்டாயே நெஞ்சே! * கருமங்கள் வாய்க்கின்று * ஓர்
எண்தானும் இன்றியே * வந்தியலுமாறு **
உண்டானை * உலகேழும் ஓர் மூவடி
கொண்டானை * கண்டு கொண்டனை நீயுமே 5

2779 நீயும் நானும் * இந்நேர் நிற்கில் * மேல் மற்றோர்
நோயும் சார்கொடான் * நெஞ்சமே! சொன்னேன் **
தாயும் தந்தையுமாய் * இவ்வுலகினில் *
வாயும் ஈசன் * மணிவண்ணன் எந்தையே 6

2780 எந்தையே என்றும் * எம்பெருமான் என்றும் *
சிந்தையுள் வைப்பன் * சொல்லுவன் பாவியேன் **
எந்தை! எம்பெருமான்! என்று * வானவர்
சிந்தையுள் வைத்துச் * சொல்லும் செல்வனையே 7

2781 செல்வ நாரணன் * என்ற சொல் கேட்டலும் *
மல்கும் கண்பனி * நாடுவன் மாயமே **
அல்லும் நன்பகலும் * இடைவீடின்றி *

நல்கி என்னை விடான் * நம்பி நம்பியே 8

2782 * நம்பியைத் * தென்குறுங்குடி நின்ற * அச்
செம்பொனே திகழும் * திருமூர்த்தியை **
உம்பர் வானவர் * ஆதியஞ்சோதியை *
எம்பிரானை * என் சொல்லி மறப்பனோ? 9

2783 மறப்பும் ஞானமும் * நான் ஒன்று உணர்ந்திலன் *
மறக்கும் என்று * செந்தாமரைக் கண்ணொடு **
மறப்பற என்னுள்ளே * மன்னினான் தன்னை *
மறப்பனோ? இனி * யான் என் மணியையே 10

2784 * மணியை வானவர் கண்ணனைத் * தன்னதோர்
அணியை * தென்குருகூர்ச் சடகோபன் ** சொல்
பணி செய் ஆயிரத்துள் * இவை பத்துடன் *
தணிவிலர் கற்பரேல் * கல்வி வாயுமே 11

**அடிவரவு:** பொருமா கண்ணுள் எம்பிரான் நெஞ்சம் கண்டாய் நீயும் எந்தை செல்வ நம்பி மறப்பு மணி வாயும்